அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 15/2014

எனது இல: EST -7/LEAVE/03/3125
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2014.06.09

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்
அரச கூட்டுத்தாபனங்கள்
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்களுக்கும்

**<u>2014 ரம்லான் (ரம்சான்) பண்டிகை காலத்தில் விசேட விடுமுறை</u>**

இம்முறை ரம்லான் (ரம்சான்) விழா 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி 2014 ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி முடிவடைய உள்ளதால் இவ் விழாக் காலத்தில் முஸ்லிம் அரச அலுவலர்களுக்கு / பணியாளர்களுக்கு தொழுகையிலும் மதவழிபாடுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

02. தொழுகைகளும் மதவழிபாடுகளும் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.ப. | 03.30 | முதல் | மு.ப. | 06.00 | வரை |
| பி.ப. | 03.15 | முதல் | பி.ப. | 04.15 | வரை |
| பி.ப. | 06.00 | முதல் | பி.ப. | 07.00 | வரை |
| பி.ப. | 07.30 | முதல் | பி.ப. | 10.30 | வரை |

03. இக்காலங்களின் போது அவ் அலுவலர்கள் / பணியாளர்கள் சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக்கூடியதாக வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம்.

04. மேலும் ரம்லான் (ரம்சான்) பெருநாளில் இறுதித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாக அரச சேவை கூட்டுத்தாபனங்கள், சட்டவாக்கச் சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லிம் அலுவலர்கள் / பணியாளர்களுக்கு விழா முற்பணம் வழங்கத் தயவு கூர்ந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்./ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு